# வண்ணாரப்பேட்டை–விம்கோ நகர் மெட்ரோ ரயில் சேவை அடுத்த ஆண்டு தொடங்கும்



சென்னை, ஜூன் 16: வண்ணாரப்பேட்டை- விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயில் பணிகள் முடிந்து, அடுத்த ஆண்டு ஜூன் மாதம் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வரும் என்று மெட்ரோ ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் வண்ணாரப்பேட்டை- விமானநிலையம் வரையிலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரையிலும் மொத்தம் 45.1 கி.மீ. தூர முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முழுமை பெற்று தற்போது மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதையடுத்து, இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்திற்கான மண் தர பரிசோதனை, நில ஆர்ஜிதம் உள்ளிட்ட பணிகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் பெரும்பாலும் முடித்துவிட்டது.

இந்நிலையில், முதல் வழித்தட திட்டத்தின் நீட்டிப்பான வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான பணிகளில் தற்போது மெட்ரோ ரயில் நிர்வாகம் வேகமாக ஈடுபட்டு வருகிறது. மேம்பாலம் வழியாக 9.2 கி.மீட்டர் தூரத்திற்கு விம்கோ நகர் வரை நடைபெறும் இப்பணியை விரைவில் முடிக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இதில் சுரங்கப் பாதையிலும், உயர்மட்ட பாதையிலும் ரயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சுரங்கப்பாதையில் 1.8 கி.மீ. தூரத்தில் வண்ணாரப்பேட்டை, தியாகராயர்கல்லூரி, கொருக்குப்பேட்டை ஆகிய 3 ரயில் நிலையங்கள் அமைகின்றன. உயர் மட்ட பாதையில் தண்டையார் பேட்டை, டோல்கேட், தாங்கல், கவுரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோ நகர் ஆகிய 6 ரயில் நிலையங்கள் உள்ளன.

வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையேயான மெட்ரோ ரயில் கட்டுமான பணிகள் பெருமளவில் முடிந்துள்ளன. அடுத்த ஆண்டு மே மாதத்திற்குள் பணிகளை முடித்து ஜூன் மாதத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும் என்று மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை மெட்ரோ ரயில் பாதை நீட்டிப்பு பணிகள் ரூ.3 ஆயிரத்து 770 கோடியில் நடந்து வருகின்றன. உயர் மட்ட பாதையில் தண்டவாளங்கள் அமைப்பதற்கான பணிகள் முடிந்து விட்டால், இந்த திட்டத்தில் பெரும்பாலான பணிகள் நிறைவடைந்துவிடும். விம்கோ நகர் வரை மெட்ரோ பணிகள் முடிந்தவுடன் அங்கிருந்து விமான நிலையத்துக்கு ரயில் இயக்கப்படும் என்றார் அவர்.